# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
# C.C. No. 31/2020 PW.11

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஞானசேகரன் | த–பெ | திருஞானசம்பந்தம். |
| ஊர்: | : | சிவகங்கை | சமயம்: | |
| வயது: | : | 72/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் துணை கண்காணிப்பாளர், (ஓய்வு) | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.04.2025**

------------------------------------------------------------------------------------------------

**21.04.2025**

**முதல் விசாரணை:**

1) நான் சிவகங்கை மாவட்டத்தில் காவல் விரல்ரேகை கூடத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து 31.10.2011 அன்று பணி ஓய்வு பெற்று தற்போது சிவகங்கையில் வசித்து வருகிறேன். கடந்த 23.04.2004 அன்று செட்டிநாடு காவல் நிலைய குற்ற எண் 19/2004, பிரிவுகள் 457,380 இதச வழக்கிற்காக வருகை தரக்கோரி காலை 11.00 மணியளவில் செட்டிநாடு காவல் நிலையத்தில் இருந்த தகவல் வந்தது. நான் சுமார் மதியம் 01.00 மணியளவில் திருட்டு சம்பவம் நடந்த இடமான நேமத்தான்பட்டி என்ற ஊரில் மாணிக்கவாசக தெருவில் உள்ள திருமதி. வள்ளிகண்ணு திரவியம் என்பவர் வீட்டிற்கு சென்றேன். அங்கு வீட்டின் பின் கதவுகள் மற்றும் கலைந்து கிடந்த சந்தேகமான பொருட்களில் பீரோக்களில் கைரேகை பரிசோதனை செய்தேன் .

2) ஒரு ஸ்டீல் பீரோ கதவுகளில் இருந்து 4 விரல்ரேகை பதிவுகள் கிடைக்கப்பெற்றது. அவை புகைப்படம் எடுக்கப்பட்டது. 4 விரல் ரேகை பதிவுகளுக்கும், G1. G2, G3,G4 என்ற எண்கள் கொடுத்து புகைப்பட பிரதிகள் பெற்று முதலாவதாக வீட்டில் உள்ள நபர்களின் விரல்ரேகைகளோடு ஒப்பிட்டு பார்த்தேன். யாருடைய ரேகையயோடும்

ஒத்திருக்கவில்லை. பின்னர் காவல் நிலையத்தில் இருந்து தொடர்ச்சியாக அனுப்பி வைக்கப்பட்ட சந்தேக நபர்களின் ரேகைத்தாள்களோடு ஒப்பீட்டு பார்த்தேன். யாருடைய ரேகைகளோடும் ஒத்திருக்கவில்லை. கடந்த 31.01.2006 அன்று தஞ்சாவூர் மாவட்டம், குன்னம் காவல் நிலைய குற்ற எண் 194/2000 குற்றபிரிவு 457, 380 இதச வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள பழைய குற்றவாளி முருகேசன் த/பெ.ராமன் பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம், என்பவரது கைரேகை தாள்கள் கிடைக்கப்பெற்றது.

3) சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற G1 முதல் G4 நான்கு விரல்ரேகை பதிவுகளையும், பழையக்குற்றவாளியான முருகேசனின் ரேகையுடன் ஒப்பீட்டு பார்த்தேன். G1 விரல் ரேகை பதிவு முருகேசனின் இடது ஆள்காட்டி ரேகையுடனும், G2 விரல் ரேகை பதிவு வலது நடுவிரல் ரேகையுடனும், G3 விரல் ரேகை பதிவு இடது பெருவிரல் ரேகையுடனும், G4 விரல் ரேகை பதிவு இடது நடுவிரல் ரேகையுடனும், ஒத்து இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான முழு விபர அறிக்கையை மேல் நடவடிக்கைக்காக குன்றக்குடி காவல் ஆய்வாளருக்கு 01.02.2006 அன்று அனுப்பி வைத்தேன். **விரல் ரேகை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆகும்.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி, காரைக்குடி.